CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com


# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் உயிர்ப்பு தின செய்தி – 2026

## நமக்காக அந்த கல்லை யார் புரட்டுவார்?

உலக மனித சக்திகளில் வல்லமை உடையோர் தமது சொந்த நலன்களை காக்கும் பொருட்டு நடந்து கொண்டிருக்கும் ஓர் கொடூர போரின் மத்தியிலே உலகம் வன்முறையாலும் பயத்தாலும் காயப்பட்டுள்ள தருணத்தில் இவ்வாண்டுக்கான உயிர்த்த ஞாயிறு செய்தியானது வெளி வருகின்றது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் யுத்தத்தினால் தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து தவிக்கும் பல குடும்பங்களில் இருந்து எழுப்பும் அவல குரலும் அவர்களின் அழுகையும் கூக்குரலும் மட்டுமல்லாது படுகாயங்களுக்கு உள்ளாகி கட்டுக்களோடு அழுது புலம்பும் மக்கள் எழுப்பும் அழுகுரல்களும் எம் நெஞ்சில் பாரத்தை உண்டு பண்ணுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் துக்க துயரத்திலும், வேதனையிலும் நாமும் பங்கு கொள்வதுடன் அவர்களுக்காக செபிக்கின்றோம். அதிகரித்து வரும் போர் நிலைமையின் விளைவுகளால் உலகல் அமைதி என்பது எட்டா கனியாகி விடுமோ என்ற அச்சமும் ஆதங்கமும் எழுந்துள்ளது. இருப்பினும் இருளின் ஆட்சி இறுதி அல்ல என்பதை இயேசுவின் உயிர்ப்பு செய்தி நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

பெரும் போர் சத்தங்கள் மேலெழுந்து வந்தாலும் வெறுமையான கல்லறை அமைதியான ஆனால் சக்திவாந்த உண்மையை எடுத்தியம்புகிறது. கல்லறையில் இருந்து புதிய வாழ்வு உருவாகியது. கல்லறை வாயிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்? (மாற்கு 16:3) இதுவே இயேசுவின் உடலுக்கு நறுமண தைலம் பூச சென்ற பெண்களின் கேள்வியாக இருந்தது. ஆனால் அவர்கள் அங்கு வந்தபோது கல்லறை வாயிலிருந்து அந்த மிகப்பெரிய கல் புரட்டப்பபடிருப்பதை பார்த்து ஆச்சரியமடைந்தார்கள் (லூக்கா 24:2). ஆண்டவரே அந்த கல்லை புரட்டிப் போட்டு இருக்கிறார். இந்த உண்மையே இன்று எமக்கு எதிர்பார்ப்பை தரும் செய்தி ஆகும்.

நாம் தவக்காலத்திலே பல தியாகங்களை மேற்கொண்டதன் பின்னர் புனித வாரத்தின் வழிபாட்டில் விசேடமாக அதன் உச்சமான புனித சனி வழிபாட்டில் புதிய நெருப்பு, பாஸ்கா புகழ் உரை, புதிய கத்தோலிக்கரை விசுவாசத்தில் இணைத்தல் ஆகிய வழிபாடுகளினால் எழுச்சி பெற்றோம்.

இந்த வழிபாடுகள் எல்லாம் நம்பிக்கையாளருக்கு மகிழ்ச்சியினதும் எதிர்பார்ப்பினதும் காரணமாகிறது எப்போதென்றால் உயிர்த்த கிறிஸ்துவை தனிப்பட்ட ரீதியில் கண்டு கொண்டதன் பிற்பாடு "அவர் நம்மோடு பேசிக்கொண்டு வருகையில் நம் உள்ளங்கள் பற்றி எரியவில்லையா" (லூக்கா 24:32) என்று சொன்னால் மட்டுமே.

பயங்கரமும் வன்முறையும் என்ற கல்லை, எண்ணற்ற மனித உயிர்களை காவு கொண்டும் ஆறாத காயங்களோடும் உறவு இழந்து ஊனமாக்கப்பட்டும் ஆறாத வடுக்களோடும் மாறாத நோய்களோடும் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டத்தை உருவாக்கி வரும் இனவாதம் மதவாதம் என்ற கல்லை, முறையான சமத்துவமின்மையால் ஏற்படும் அநீதி, அதிகார துஷ்பிரியோகம் அல்லது நீதியற்ற செயல்கள் என்ற கல்லை,

## CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com


எதிர்கால சந்ததியினரின் கனவை குழி தோண்டி புதைக்கும் சில அரசினால் முன்னெடுக்கப்படும் அடிமைத்தனம் ஒழுக்கக்கேடு என்ற கல்லை யார் எமக்காக புரட்டிப் போடுவார் என்ற கேள்விகளுடன் உலகம் முழுவதும் வாழும் இளையோர், முதியோர், அப்பாவிகள், நீதிமான்கள், ஏழைகள் மற்றும் பணக்காரர் அனைவருக்கும் விடை ஒன்றுதான் ஆண்டவரால் தான் இந்த கற்களை புரட்டிப் போட முடியும்.

பெரிய வெள்ளிக்கிழமை உலகம் துன்பத்தையும், அநீதியையும், மரணத்தையும், கவலையையும் கண்டது. ஆனால் உயிர்த்த ஞாயிறு காலையில் கடவுள் மரணத்தை விட வாழ்வும், வெறுப்பை விட அன்பும், விரக்தியை விட எதிர்பார்ப்பும் வலிமை வாய்ந்தது என்பதை வெளிப்படுத்தினார்.

ஆண்டவர் உலக அமைதியை அச்சுறுத்தும் நம்பமுடியாத, நினைத்துப்பார்க்க முடியாத, புரட்ட முடியாத தடைகள் ஆகிய கல்லை புரட்டிப்போடுவார் என்ற உறுதியோடு அவருடைய உயிர்ப்பானது இந்த இருள் சூழ்ந்த காலத்திலும் எமது நம்பிக்கையை புதுப்பிப்பதோடு எமது எதிர்பார்ப்பு வலுப்படுத்தப்படுத்தப்படுவதாக.

இந்த உயிர்ப்பு காலத்திலே "காயீனீன் கரம்" ஆன ஆட்சியானது "உண்மையான மனமாற்றத்தின் இதயத்தால்" முறியடிக்க பட வேண்டுமென்று தொடர்ச்சியாக ஜெபிப்போம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அனைத்து இறை மக்களுக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. அல்லேலுயா

✠ **மேதகு ஆயர். ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை**
**குருநாகல் மறைமாவட்ட ஆயர்,**
**தலைவர்,**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

✠ **மேதகு ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை,**
**கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர், அப்போஸ்தலிக்க பரிபாலகர்**
**மட்டகளப்பு மறைமாவட்டம்**
**பொதுச்செயலாளர்,**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

CATHOLIC BISHOPS' CONFERENCE SRI LANKA

2026 பங்குனி மாதம் 25ம் திகதி

CamScanner